வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 30.12.2024 திங்கட்கிழமை இதழ் : 364 பக்கங்கள் : 12

# எனது பாதையிலேதான் அநுர குமாரவும் பயணம்!

## இந்தியாவில் ரணில் புகழாரம்

புதுடில்லி, டிசெம்பர் 30

**நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க எனது பாதையிலேயே பயணிக்கின்றார். அவருக்கு எனது வாழ்த்துக்கள் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

இலங்கையின் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் நேற்று முன்தினம் நேபாளம் புறப்படுவதற்கு முன்னர் இந்தியாவிலிருந்து சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் முன்னெடுத்த வேலைத்திட்டங்களையும், நான் ஆரம்பிக்கவிருந்த அபிவிருத்திகளையும் முன்கொண்டு செல்ல தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க திடசங்கற்பம் பூண்டுள்ளார்.

அதனை அவர், தனது உத்தியோகபூர்வ முதலாவது வெளிநாட்டுப் பயணமான இந்திய விஜயத்தின்போது வெளிப்படுத்தியுள்ளார்.

நாட்டின் நலன் கருதிய அநுர குமாரவின் செயல்பாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என்ற நம்பிக்கை 11

# மொட்டுக் கட்சியை பலப்படுத்தும் நாமல்

கொழும்பு, டிசெ. 30

எதிர்வரும் 2025ஆம் ஆண்டில் விரிவான மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொதுஜன பெரமுன கட்சியை பலப்படுத்தவுள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான 11

# மார்ச் வரை நீடிக்கும் தேங்காய் தட்டுப்பாடு!

கொழும்பு, டிசெ. 30

எதிர்வரும் மார்ச் மாதம் வரையில் தேங்காய் விலையில் மாற்றம் இல்லை என தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மார்ச் மாதம் வரையில் தேங்காய் விளைச்சல் கிடைக்காது என்ற காரணத்தினால் தொடர்ந்தும் 11

# பிரிட்டன் உட்பட பல நாடுகளுக்கு தூதுவர்களை நியமிக்காத அரசு!

கொழும்பு, டிசெ. 30

பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகளின் தூதரகங்களில் தூதுவர்கள் நியமிக்கப்படாமல் வெற்றிடமாக உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிரந்தர தூதுக் குழு, பிரிட்டன், இந்தியா, ஆஸ்திரேலியா, ரஷ்யா, ஜப்பான், இந்தோனேசியா, மலேசியா, நேபாளம், பிரேசில் மற்றும் 20 நாடுகளின் தூதுவர்கள் நாட்டுக்கு திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அந்த நாடுகளுக்கான தூதுவர்கள் நியமிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் நிரந்தர தூதுக் குழு, பிரிட்டன், இந்தியா, ரஷ்யா மற்றும் ஆஸ்திரேலியா 11

# சட்டவிரோத மதத் தலங்களுக்கு ஒருபோதும் அனுமதி கிடையாது!



## சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர்

கொழும்பு, டிசெ. 30

"கடந்த ஆட்சிகள் போல் இந்த ஆட்சியில் சட்டவிரோத மதத் தலங்களுக்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது." - என்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனெவி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

கடந்த அரசுகள் போல் இந்த அரசையும் எவரும் 11

# முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு மேலும் குறையும்!

## அநுர அரசு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் கிடையாது என்ற புலனாய்வு அறிக்கையின் பின்னரே அவர்களுக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டது. அடுத்த மீளாய்வு புலனாய்வு அறிக்கை கிடைத்தப் பிறகு தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு மேலும் குறைக்கப்படலாம் என அமைச்சர் கிருஷாந்த அபேசேன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கும் 11

# யாழ்., கட்டுநாயக்க விமான நிலையங்களை விஸ்தரிக்க முன்மொழிவு கோருகிறது அரசு!

கொழும்பு, டிசெ. 30

இலங்கையின் யாழ்ப்பாணம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையங்கள் விஸ்தரிக்கப்பட உள்ளதால் இதற்கான முன்மொழிவுகளை அரசாங்கம், சர்வதேச நிறுவனங்களிடமிருந்து கோரியுள்ளது.

இலங்கையின் அரசால் நடத்தப்படும் விமான நிலைய முகாமைத்துவ நிறுவனம், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகளை கோரியுள்ளது.

எனினும், கொழும்பு விமான தகவல் பிராந்தியத்துக்கு அருகாமையில் விமான நிலையங்கள் காணப்படும் இந்தியா, மாலைதீவு, இந்தோனேசியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்படவில்லை. 11

# சவேந்திர சில்வா ஓய்வு?

கொழும்பு, டிசெ. 30

ஜெனரல் சவேந்திர சில்வா பாதுகாப்புப் படைகளின் பதவி நிலைப்பிரதானி பதவியிலிருந்து 2025 ஜனவரி 01ஆம் திகதி முதல் ஓய்வு பெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சவேந்திர சில்வாவின் சேவைக் காலத்தை கடந்த ஜூன் முதலாம் திகதியில் 11

# நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட எமது அரசு இடமளிக்காது!

## சுனில் ஹந்துன்நெத்தி திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 30

இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட இடமளிக்கமாட்டோம் என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

இன, மத வன்முறைகளைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், நாட்டில் இன, மத ரீதியிலான சில பிரச்னைகள் இருக்கின்றமை உண்மை தான், அவற்றுக்கு நாம் தீர்வு 11

# அநுர அரசை பலவீனப்படுத்த ஒரு தரப்பினர் திட்டமிட்டு சதி!

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 30

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்துவதற்கு ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகின்றனர். கிடைக்கப் பெற்றுள்ள மக்களாணையை ஒருபோதும் பலவீனப்படுத்த போவதில்லை என பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார். 11

# மருந்துகளின் விலைகளை ஒழுங்குபடுத்துவதில் சிக்கல்

கொழும்பு, டிசெ. 30

இலங்கையில் மருந்துகளின் விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கும் சட்ட சவால்களைத் தீர்ப்பதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெறுவதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

மருந்து இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் விடயத்தில் நிர்ணய விலைகள் விடயங்களில் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உரிய ஏற்பாடுகள் போதாமையின் காரணமாகவே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் - மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவப் பெருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள் - ஐ.சிவசாந்தன்)

# தீவக மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண விரைவில் நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் உறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 30

தீவக மக்களுக்கு பல்வேறு அடிப்படைப் பிரச்னைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை விரைவில் நாம் முன்னெடுக்க இருக்கின்றோம். இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ. இளங்கோவனுடனும் கலந்துரையாடியிருக்கின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேத நாயகன் தெரிவித்தார்.

பிரிட்டன் வாழ் புங்குடுதீவைச் சேர்ந்த நலன்விரும்பிகளால், வட இலங்கை சர்வோதய குடிதண்ணீர் வழங்கல் திட்டத்துக்கு வெள்ளிரும்பிலான குடிதண்ணீர் பவுசர் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை புங்குடுதீவு புஸ்பா மணி மண்டபத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாண ஆளுநரால், பவுசர் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டு உதவிய நலன்விரும்பிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கல்லும் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், குடிதண்ணீரின் தேவை இன்று தீவகப் பகுதியில் மாத்திரம் அல்ல யாழ்ப்பாண நகரப் பகுதியிலும் உணரப்பட்டுள்ளது. இன்று அங்கு குடிதண்ணீரின் தரம் மற்றும் அளவு தொடர்பில் பல பிரச்னைகள் இருக்கின்றன. கடல் நீரை நன்னீராக்கி குடிதண்ணீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும் வேறு குடிதண்ணீர் மூலங்களையும் கண்டறிய வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் எண்ணம் சிந்தனை நல்நோக்குடன் இருந்தமையால் அவர் அன்று ஆரம்பித்த வட இலங்கை சர்வோதய சங்கம் வியாபித்து விருட்சமாக வளர்ந்திருக்கின்றது. நாம் நல்ல எண்ணத்துடன் எதை ஆரம்பித்தாலும் அதை இறை சக்தியாவது வெற்றிகரமாக நடத்தி முடிக்கும்.

இந்த ஊர் மக்கள் புலம் பெயர்ந்து சென்றாலும் தமது சொந்த மண்ணை மறக்கவில்லை. அதனால்தான் அவர்கள் இன்றும் உங்களுக்கு உதவியைச் செய்கின்றார்கள். இவ்வாறு உதவி செய்ய முன்வந்த அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இவ்வாறான உதவிகளை உரிய முறையில் நீங்கள் பயன்படுத்தி பலன்பெறவேண்டும் - என்றார்.

இதேவேளை, புங்குடுதீவு பிரதேசத்தில் பொலிஸ் காவலரண் தேவை எனவும் ஏதாவது ஒரு வங்கி அமைக்கப்பட வேண்டும் எனவும் அந்தப் பிரதேச மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (அ)

# இலக்கியப் பேராளுமைக்கு அஞ்சலிகள்!

## யோகேந்திரநாதனின் மறைவுக்கு சிறீதரன் இரங்கல்

கிளிநொச்சி, டிசெ. 30

ஈழ மண்ணின் மூத்த படைப்பு இலக்கியவாதியும், கிளிநொச்சி மண்ணுக்கு அடையாளம் தந்தவருமாகிய மதிப்பார்ந்த நா.யோகேந்திரநாதன் ஐயா மறைந்தார் என்ற செய்தி மனதை நொருங்கச் செய்திருக்கின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யோகேந்திரநாதனின் மறைவையொட்டி அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அகவை மூப்பையும் அதனால் அவர் உற்றிருந்த நோய் உபாதைகளையும் கடந்தும் தமிழ்த் தேசியப் பயணப் பாதைகளை தன் படைப்புகள் ஊடாக வெளிக்கொணர வேண்டும் என்ற பேரவாவில் எழுத்துலகில் இயங்கிக்கொண்டே இருந்த ஈழத்தின் புகழ்பூத்த பேராளுமையான அவர், ஈழவிடுதலைப் போர் குறித்த அனுபவங்களையும், ஆதாரங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த ஈழத்தின் அடையாள மனிதனாகவுமே இறுதி வரை இருந்தார்.

போராட்ட காலத்தில் புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பான நா.யோகேந்திரநாதனின் 'உயிர்த்தெழுகை' நாடகம் ஈழ உணர்வாளர்கள் மத்தியில் அவருக்கான இடத்தை மேலுயர்த்தி, எமது மக்களின் உணர்வுகளில் நிறைந்த மனிதனாக அவரை மாற்றியிருந்தது.


இன விடுதலை என்ற சத்திய இலட்சியத்தை தன் இதயத்தே சுமந்த ஓர் பேனாமுனைப் போராளியாக விடுதலைப் போராட்ட காலத்தில் எத்தனை வீரியத்தோடு அரசியல், நாடக, வானொலித் துறை சார்ந்து இயங்கினாரோ, அதே வீரியத்தை யும், விவேகத்தையும் படைப்பு இலக்கியம் எனும் துறைக்குள் ஒருசேர இணைத்து, புனைவு கள் அற்ற போரியல் ஆவணங்களாக தன் படைப்புகளை வெளிக்கொணர்ந்த வண்ணமிருந்த அவரின் எழுத்துலகப் பணி, ஒரு விடுதலைப் போராளியின் ஆத்ம தாகம் நிறைந்த காலப் பெரும் பணியாகவே இருந்தது.

நீந்திக் கடந்த நெருப்பாறு நாவல் தொடர்களின் வெளியீட்டின் பின்னர் நோயுற்றிருந்த அவர் அதிலிருந்து ஓரளவு மீண்டெழுந்த பின்னர், உலகப் போரியலின் வரலாற்றுத் திருப்புமுனையான 'குடாரப்புத் தரையிறக்கம்' குறித்துப் பேசும் 34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்னும் வரலாற்று நாவலை எழுதி வெளியிட்ட நிறைவில் இருந்து நாம் இன்னும் மீளாத நிலையில் அவர் மறைந்தார் என்ற செய்தி மனத்துயரைத் தந்திருக்கின்றது.

ஒரு படைப்பாளன் தன் படைப்புகளின் வழி காலம் உள்ளவரை வாழ்வான் என்பது எத்துணை உண்மையோ, காலம் எம் மண்ணில் உற்பவித்த விடுதலைப் போராளி ஐயா யோகேந்திரநாதனும் தமிழ்த் தேசியத்தின் அழியா முகமாக என்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்தே இருப்பார்.

இலட்சியப் பற்றுறுதி மிக்க, எமது மண்ணின் முதுபெரும் ஆளுமை "மாமனிதர்" யோகேந்திர நாதனுக்கு எமது புகழ் வணக்கம். அவரின் ஆத்மா அமைதி பெறவும், இழப்பின் வலி சுமந்திருக்கும் அவரது குடும்பத்தினர் இந்தத் துயரிலிருந்து மீளவும் எனது பிரார்த்தனைகளும். - என்றுள்ளது. (அ)

# ஈழத்தின் மூத்த படைப்பாளி யோகேந்திரநாதன் காலமானார்



யாழ்ப்பாணம், டிசெ.30

ஈழத்தின் மூத்த படைப்பாளியும் ஊடகவியலாளருமான நா.யோகேந்திரநாதன் (வயது 80) நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார். தனது படைப்புகள் மூலம் தமிழ்த் தேசிய எழுச்சிக்கு வலுச் சேர்ந்த அவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் மதிப்பளிக்கப்பட்டவர்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் கிளிநொச்சி - திருவையாறு தபாலகத்தின் உதவித் தபால் அதிபராகப் பணியாற்றியிருந்தார் 1960களில் இலக்கியத் துறைக்குள் பிரவேசித்தார்.

இலங்கை வானொலியில் நாடக எழுத்தாளராக பணியாற்றிய அவர், போர்க்காலத்தில் புலிகளின் குரல் வானொலியில் நாடக எழுத்தாளராகவும் தயாரிப்பாளராகவும் கடமையாற்றினார். இக்காலத்தில் ஒலிப்பரப்பான உயிர்த்தெழுகை, உயிர் குடிக்கும் பறவைகள், சாம்பல் பறவைகள், காவல் வேலி போன்ற நாடகத் தொடர்கள் அவருக்கு மக்கள் மத்தியில் பெரும் மதிப்பை ஏற்படுத்தின.

1993இல் ஈழநாதம் நாளிதழ் வன்னிப் பிராந்தியத்துக்கான பதிப்பை தொடங்கிய போது அதன் ஆசிரியராக பணியாற்றினார். 1995 வரை வன்னி ஈழநாதத்தின் ஆசிரியராக அவர் தொடர்ந்து பங்காற்றினார். யாழ்ப்பாணத்தில் "புதுவிதி" வார இதழின் கௌரவ ஆசிரியராகவும் அவர் செயற்பட்டிருந்தார்.

மேலும் கண்ணீர் மழலைகள், விடுதலை முழக்கம் உட்பட பல தொடர் நவீனங்களை எழுதிய அவர் பலநூற்றுக் கணக்கான சிறுகதைகளையும் படைத்துள்ளார். தவிர போர்க் காலத்தில் பல வீதி நாடகங்களையும் உருவாக்கியிருந்தார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் வெளியான பல பத்திரிகைகளில் அரசியல் கட்டுரைகளை சந்திரசேகர ஆசாத், யோகநாராயணன், விஷ்ணுபுத்திரன், அக்கினீஸ்வரன் என்ற புனை பெயர்களிலும் நா.யோகேந்திரநாதன் என்ற இயற்பெயரிலும் எழுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போரை ஆவணமாக்கும் பெருமுயற்சியில் அளப்பரிய பங்காற்றிய அவர் போராட்ட வரலாற்றை மையமாகக் கொண்டு நீந்திக் கடந்த நெருப்பாறு, (முள்ளிக்குளத்திலிருந்து கிளிநொச்சிவரை), நீந்திக்கடந்த நெருப்பாறு (கிளிநொச்சியிலிருந்து புதுமாத்தளன் வரை), மரண மழையில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற நாவல்களைப் படைத்திருந்தார்.

கடும் சுகயீனத்தால் பாதிக்கப்பட்டிருந்த வேளையிலும் ஆனையிறவை விடுதலைப் புலிகள் வெற்றிகொண்ட வரலாற்றை வெளிப்படுத்தும் விதமாக 39 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற நாவலை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

இடது சாரிக் கொள்கையை மாறாத பற்றுடன் தன் வாழ்நாள் முழுவதும் பின்பற்றிய அவர் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராக அளப்பரிய பங்காற்றினார். இதனால் பல்வேறு இன்னல்களுக்கும் அவர் முகம் கொடுத்திருந்தார். சமூக ஒடுக்குமுறையை வெளிப்படுத்தும் விதமாக இடிபடும் இரும்புக் கோட்டைகள் என்ற நாவலையும் இவர் படைத்திருந்தார்.

போர்க்காலத்தின் பின்னர் இவர் எழுத்திய 3 நாவல்கள் தேசிய ரீதியில் விருதுகளை வென்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இலங்கை வானொலியில் ஒலிப்பரப்பான காட்டு நிலா, என்ற வானொலி நாடகம் நூலாக வெளியாகியிருந்தது.

யோகேந்திரநாதன் படைப்புத்துறை தவிர்த்து கூத்துக் கலைஞராக, அரங்க நாடக நடிகராக வீதி நாடகத் தயாரிப்பாளராக, வானொலி நாடக தயாரிப்பாளராக, குரல் வழங்குநராக, சிறந்த விமர்சகராக, பேச்சாளராக எனப் பல் துறை ஆளுமையாளராக மிளிர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் பூதவுடல் நீர்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலர் நேற்று அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை நடைபெறும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.12.2024 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 15

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பேரம் பேசுவதற்கான பலம்

காலஞ்சென்ற இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் ஏழாவது ஞாபகார்த்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றியிருக்கின்றார். இதன்போது ரணில் விக்கிரமசிங்க பல்வேறு விடயங்களை பகிர்ந்து கொண்டிருக்கின்றார். வாஜ்பாய் பிரதமராக இருந்த போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக – குறிப்பாக அவர்களது கடற் புலிகளின் ஆற்றலை கட்டுப்படுத்துவதற்கு எவ்வாறு உதவினார் என்பதை நினைவு கூர்ந்திருக்கின்றார்.

இவை எல்லாவற்றை விடவும் ரணில் குறிப்பிட்டிருக்கும் ஒரு விடயம் தான் தமிழர் தரப்பு ஆழமாக நோக்க வேண்டிய விடயமாகும். ஏன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது என்பதற்கு ரணில் குறிப்பிட்டிருக்கும் காரணம்தான் கவனத்துக்குரியது. அதாவது, விடுதலைப் புலிகள் வர்த்தக மையங்கள் மீது தாக்குதல் நடத்தியதால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இவ்வாறானதொரு சூழலில்தான் நாம் விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டிய சூழல் ஏற்பட்டது.

காலம் கடந்து கூறினாலும் இந்த விடயத்திற்கு இன்றைய சூழலில் ஒரு முக்கியத்துவம் உண்டு. அதாவது, அரசாங்கத்துடன் தமிழர் தரப்புக்கள் பேசவேண்டுமாயின் பேசுவதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் வல்லமை தமிழர் தரப்பிடம் இருக்க வேண்டும். இந்தத் தலையங்கம் விடுதலைப் புலிகள் இயக்கம் மத்திய வங்கி மற்றும் கட்டுநாயக்க விமான நிலையம் என்பவற்றை தாக்கியதை இந்தத் தலையங்கம் ஆதரிக்க வில்லை.

இராணுவ நிலைகளை தாக்குவது என்பது வேறு, பொதுமக்களின் பயன்பாட்டுக்குரிய நிலையங்களை தாக்குவது என்பது வேறு. இரண்டுக்கும் அரசியல்ரீதியில் பெரிய வேறுபாடுண்டு. ஆனால், ஒரு தரப்பு அதிகாரமும் சர்வதேச ஆதரவும் கொண்டிருக்கும் அரசை எதிர்க்கும் போது அந்த அரசுக்கு ஏதோவொரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் வல்லமையுடன் இருக்கின்றபோதுதான், ஓர் அரசு, குறிப்பிட்ட தரப்புடன் பேசுவதற்கு இணங்கும்.

இன்று ஒற்றையாட்சியை நீக்குவது பற்றியும் தமிழ் மக்களுக்கான சுயநிர்ணயம் தொடர்பிலும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் பேசிவருகின்றன. சமஷ்டி, ஒரு நாடு இரு தேசமென்னும் கவர்ச்சிகரமான சுலோகங்களை உச்சரிக்கின்றன. ஆனால், இந்த அடிப்படையில் அரசாங்கத்துக்கு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ் கட்சிகளின் எவ்வாறான பலமுண்டு. எதைச் செய்து அரசாங்கத்தை தங்களது நிபந்தனைகளை நோக்கி அடிபணியச் செய்யப் போகின்றன?

இந்த இரண்டு கேள்விகளுக்கும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளிடமுள்ள பதில் என்ன? தங்களை ஒரு பொருட்டாகக் கருதக் கூடியளவுக்குக் கூட தமிழ் கட்சிகளால் ஒரு சிறிய அசைவைக் கூட நிரூபிக்க முடியவில்லை. இந்த நிலையில் தற்போதைய அரசாங்கத்துடன் தமிழ் மக்கள் பேரவை என்னும் தோல்வியுற்ற அமைப்பொன்றினால் முன்வைக்கப்பட்ட தீர்வின் அடிப்படையில் பேசப் போவதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகின்றார். ஒரு வேளை அவர் கூறுவது போன்று அவருடன் ஏனைய கட்சிகள் உடன்பட்டுச் சென்றாலும் கூட, அரசாங்கம் எதற்காக, தமிழ் கட்சிகளின் நிபந்தனையை ஏற்றுப் பேச வேண்டும்? அதற்கான நிர்பந்தம் என்ன?

அரசுகளுடனான பேச்சுவார்த்தையின் வெற்றி என்பது மற்றைய தரப்பின் பலப் பிரயோகத்தின் மீதே நிலைகொண்டிருக்கும். இன்னொரு வகையில் சொல்லப் போனால் மற்றைய தரப்பின் மீதான அச்சத்தின் மீதே நிலைகொண்டிருக்கும். இதனைத்தான் ரணில் குறிப்பிடுகின்றார். அரசு பலமாகவும் மற்றைய தரப்பு பலவீனமாகவும் இருக்கும் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருக்கும் ஒரேயொரு நம்பிக்கை, பலமானதொரு வெளித் தரப்பு மட்டுமே ஆகும். ஆனால் 1990களுக்கு பின்னர் தமிழர்களுக்கு அப்படியொரு வெளித்தரப்பின் ஆதரவும் இருந்ததில்லை. 1984 – 90 வரையான காலப்பகுதியில் இந்தியாவின் ஆதரவு இருந்தது. இந்தப் பின்புலத்தில் தற்போதைய சூழலில் இந்தியா 13ஆவது திருத்தச் சட்டம் பற்றியும் பேசாது விடுமானால், தமிழர்களின் அரசியல் குரல் கொஞ்சம் கொஞ்சமாக மங்கி, மறைந்து போய்விடும்.

## யாழ்ப்பாணத்தில் தன்னார்வமாக இணைந்த இளைஞர்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்ப்பாணத்தில் தன்னார்வ ரீதியாக ஒன்று சேர்ந்த இளைஞர்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பூரண அனுசரணையோடு கருகம்பனை பொது அமைப்புகளும் 'விதையனைத்தும் விருட்சமே' செயல்திட்டமும் இணைந்து விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தன.



இதில் கிராம உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர், இளைஞர்கள், பிரதேச சபை ஊழியர்கள், 'விதையனைத்தும் விருட்சமே' செயல்திட்ட உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-05)

## உயர் டிப்ளோமா பாடநெறி நிறைவு; மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.30

ரவர் நாடக அரங்கப் பாடசாலை மூலம் நாடகமும் அரங்கக் கலைகளுக்குமான உயர் டிப்ளோமா பாடநெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கு உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் இந்திய கலாசார மத்திய நிலையத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அறங்காவலர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-05)

## ஹெரோயினுடன் யாழ்ப்பாணத்தில் பெண் கைது

யாழ்ப்பாணம், டிசெ.30

ஏழாலை தெற்கு, மயிலங்காடு பகுதியில் 5,830 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 1,070 மில்லி கிராம் ஹெரோயின் என்பனவற்றுடன் 41 வயது பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி விஜயதர்சனவின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ- 05)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



யாழ்ப்பாணம்,டிசெ.30

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, 30 மாணவர்களுக்கு பெறுமதி மிக்க கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ப. கேசவதாசனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்ததுடன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

டிசம்பர் -30 திங்கக்கிழமை
குரோதி வருடம் - மார்கழி 12
நல்ல நேரம்: 6.00- 7.30
ராகு காலம்:07.30 -09.00
திதி : அமாவாசை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள் நண்பர்கள் சிலர் நன்றி மறந்து பேசுவார்கள். திட்டமிடாத செலவுகளை போராடி சமாளிப்பீர்கள்.

**இடபம்**
பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். எந்த பிரச்னையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வேற்றுமதத்தவர் உதவுவார். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விஷயங்களை பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

**கன்னி**
கடினமான காரியத்தை எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**விருட்சிகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். வரவேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள்.

**மகரம்**
குடும்பத்திலும் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கும்பம்**
இதுவரை இருந்த சோர்வு களைப்பு யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலமான சூழல் உருவாகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்து போகும். விமர்சித்தாலும் கலங்கி கொண்டே இருக்காதீர்கள்.

# வீடுகளுக்குள் நுழைந்து திருடியவரும் நகைகளை வாங்கியவரும் மறியலில்!

*யாழ்ப்பாணம், டிசெ.30*

சாவகச்சேரி - மீசாலை பகுதியில் வீடு புகுந்து நகைகள் மற்றும் டொலர்கள் என்பனவற்றை திருடிய சந்தேகநபர் ஒருவரும் அந்த நகைகளை வாங்கிய சந்தேகநபரும் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மீசாலை கிழக்கு மற்றும் மீசாலை மேற்கு பகுதிகளில் உள்ள வீடுகளில் தொடர்ச்சியாக ஒருவர் வீடுகளுக்குள் நுழைவதும், மக்கள் துரத்தும் போது ஓடுவதும் போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில், மீசாலை பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் தனியாக வசித்து வந்த வீட்டில் ஒரு சங்கிலி, ஒரு சோடி காப்பு மற்றும் இரண்டு மோதிரங்கள் என எட்டுப் பவுண் நகைகள் மற்றும் ஒரு தொகை டொலர் என்பன திருடப்பட்டன.



இது குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் இருவரை கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர்களை 14 நாட்கள் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-05)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக புலமைப் பரிசில்கள் யாழில் பகிர்தல்

*யாழ்ப்பாணம், டிசெ.30*

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களின் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில்கள் பகிர்தல் நிகழ்வு மாகாண சிரேஷ்ட முகாமையாளர் திருமதி எல். லக்சாயினி தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டார். (எ)



# சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு

*யாழ்ப்பாணம், டிசெ.30*

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் 2024ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப் புலவர் பட்டத் தெரிவுகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன என அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ. த. குமரன் அறிவித்துள்ளார்.

இதில், சைவப்புலவர் பரீட்சையில் கீர்த்திகா றஞ்சன் (இணுவில்), இராமன் இராமகிருஷ்ணன் (பத்தனை), திருமதி மனோன்மணி தட்சணாமூர்த்தி (மட்டக்களப்பு) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இளஞ்சைவப்புலவர் பட்டத் தெரிவில் சந்திரகுமார் சுலெக்ஷி (வவுனியா), தெய்வேந்திர மூர்த்தி செல்வநாயகி (பரந்தன்), சௌந்தரலிங்கம் சதுஜா (வாழைச்சேனை), செல்வநாயகம் வதனி (கோறளங்கேணி), மகேந்திரன் டினுசா (வாழைச்சேனை), சாமித்தம்பி கந்தசாமி (மட்டக்களப்பு), மகேதீஸ்வரன் விபகரணி (மட்டக்களப்பு), சந்திரமோகன் டக்சலா (கல்குடா), ரவீந்திரன் அபிராமி (வாழைச்சேனை), கனகலிங்கம் சதுர்ஷனா (பொலநறுவை), தேவராசா ஜெருஷன் (வாழைச்சேனை), பத்ம நாதன் விஷாந்தினி (வாகனேரி), திருத்தணிவாவா ஜெகநாதன் (களுவாஞ்சிக்குடி), தங்கத்துரை யதுசிகா (மண்டூர்) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர் என்று அவர் மேலும் அறிவித்துள்ளார். (எ)

# தனியார் பஸ் சாரதி மீது கடுமையான நடவடிக்கை

## வடமாகாண ஆளுநர் பணிப்பு

*யாழ்ப்பாணம், டிசெ.30*

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வழித்தடத்தில் தனியார் பேருந்து ஒன்று சாரத்திய நடைமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்தமை தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவலாக காணொலிகள் பகிரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இவ்வாறான சாரத்தியத்துக்கு கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு, வடக்கு மாகாண தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தவிசாளர் க. மகேஸ்வரனை வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கமைவாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பல பகுதிகளிலும் பச்சை அரிசி தட்டுப்பாடு!

## விரைவில் தீர்வு காண நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 30

**நாட்டின் பல பகுதிகளிலும் பச்சை அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.**

தற்போது சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, நெல் சந்தைப் படுத்தல் சபையில் நெல்லை கொள்வனவு செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகையால் சந்தைக்கு தேவையான அரிசியை விநியோகிப்பதற்கு அரசாங்கம் தற்போது தயாராகி வருகின்றது.

இந்த நிலையில், சந்தையில் உள்ள அரிசி மாபியாவை முறியடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# 383 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 30

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட போக்குவரத்து நடவடிக்கையின் போது, மதுபோதையில் வாகனம் செலுத்திய 383 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் 8 ஆயிரத்து 392 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

போக்குவரத்து விதிகளை மீறியதற்காக ஆயிரத்து 382 சாரதிகள், அனுமதிப்பத்திரம் இல்லாமல் பயணித்த குற்றங்களுக்காக 690 சாரதிகள், அதிக வேகத்தில் பயணித்த 98 சாரதிகள் மற்றும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 59 சாரதிகளுக்கு எதிராகவே இவ்வாறு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் விசேட போக்குவரத்து நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை - இந்தியக் கூட்டு கடற்படை பயிற்சி நிறைவு

கொழும்பு, டிசெ.30

இலங்கை கடற்படைக்கும் இந்திய கடற்படைக்கும் இடையிலான வருடாந்த ஸ்லினெக்ஸ் - 24 இருதரப்பு கடற்படை பயிற்சியானது கடந்த 16 முதல் 20 வரை விசாகப்பட்டினம் கடற்படைத் தளத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இரு நாட்டு கடற்படைகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் ஆண்டுதோறும் நடைபெறும் இந்த கடற்படை பயிற்சிக்காக, இலங்கையின் கடற்படைக் கப்பலான சௌரா மற்றும் இந்திய கடற்படையின் ஐ. என். எஸ். சுமித்ரா ஆகியவை பயிற்சியில் பங்கேற்றன.

கடற்படை தொழில்நுட்ப அறிவு மற்றும் உத்திகளை பரிமாறிக்கொள்வதற்கான பயிற்சிகள், கடற்படை கப்பல் கட்டும் தளம், இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையே நட்புறவை வளர்க்க ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் இதன்போது இடம்பெற்றன. மேலும், துப்பாக்கிச் சூடு பயிற்சிகள், கப்பலுக்கு கப்பல் பரிமாற்றத்துக்கான தயாரிப்புகள், தேடுதல் மற்றும் மீட்புப் பயிற்சிகளும் இடம்பெற்றன.

இதன்மூலம் இந்திய - இலங்கை இருதரப்பு பயிற்சி இரு தரப்புக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்துவதற்கும், அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதற்கும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (எ)

# கடந்த இரண்டு ஆண்டுகளில் விலங்குகளினால் பயிர்ச்செய்கைக்கு 55.3 பில்லியன் ரூபா இழப்பு

## தேசிய விவசாயிகள் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் விலங்குகள் பயிர்ச்செய்கைக்கு 55.3பில்லியன் ரூபா பெறுமதியான இழப்பை ஏற்படுத்தியதாக தேசிய விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-காட்டு விலங்குகள் சுமார் 86.7 மில்லியன் தேங்காய்களை அழித்துள்ளன. இதன் மதிப்பு 5.2 பில்லியன் ரூபாவாகும், நாட்டின் 140,450 ஹெக்ரேயர் பரப்பளவிலான மொத்த தேங்காய் விளைச்சலில் 17.5 வீதம் பாதிப்படைந்துள்ளது.

அத்துடன் நெற்செய்கையில், 25சதவீதமும் சோளச் செய்கையில் 11 வீதம் மற்றும் காய்கறிகளில் 7 வீதம் சேதமாக்கப்பட்டுள்ளன.

காட்டுப்பன்றிகள் மற்றும் குரங்குகள் மட்டும் 131 மில்லியன் கிலோ நெற்செய்கையும் 169 மில்லியன் கிலோ வாழைப்பழங்களையும், 6.8 மில்லியன் கிலோ சோளத்தையும் அழித்துள்ளது, அவற்றின் பெறுமதி முறையே 13.2 பில்லியன் ரூபா, 22.1 பில்லியன் ரூபா மற்றும் 10.3 பில்லியன் ரூபா ஆகும்.

ஒட்டுமொத்தமாக விலங்குகள் 59.7 மில்லியன் கிலோ காய்கறிகளையும் அழித்து, 4.5 பில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஊவா மாகாணம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு அங்கு 45,000 ஹெக்ரேயரில் பயிரிடப்பட்ட பயிர்களை அழித்துள்ளன.

விவசாயப் பகுதிகளில் வனவிலங்குகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிப்பதைக் குறைப்பதற்கு வேட்டையாடுதல் பிரச்னையைத் தீர்க்க அரசாங்கம் நவீன தொழில்நுட்பத்தைப் பின்பற்ற வேண்டும் -என்றார். (அ)

# முட்டை விலை குறைந்தாலும் பேக்கரி பொருள்களின் விலை குறையாதாம்!

கொழும்பு, டிசெ. 30

சந்தையில் முட்டை விலை குறைந்துள்ளபோதும் பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலை குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்த்தன தெரிவித்தார்.

முட்டை விலை குறைவடைந்துள்ள நிலையில் பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலை குறைப்பு செய்யாமல் இருப்பது தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-இலங்கையில் முட்டை விலை காலநிலை போன்றது. இன்றுள்ள விலை நாளை இல்லை. நாளுக்கு நாள் மாற்றமடைகிறது.

15, 20 ரூபாவுக்கு இருந்த முட்டை 60, 70 ரூபாவரை விலை அதிகரித்தது. தற்போது மீண்டும் 25,30 ரூபாவரை விலை குறைந்துள்ளது.

இந்த விலை குறைப்பை அடிப்படையாகக் கொண்டு பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை குறைக்க முடியாமல் இருக்கிறது. பேக்கரி உற்பத்திப் பொருட் களின் விலை குறைப்பை மேற் கொள்வதற்கு நிச்சயமாக கோதுமை மா மற்றும் மாஜரின் விலை குறைவடையவேண்டும்.

கோதுமா விலை குறைப்பு தெரிந்தளவில் இரண்டு வருடங்களுக்கும் அதிக காலமாக இடம்பெறவில்லை. டொலரின் பெறுமதி 300, 400 ரூபாவுக்க இருக்கும்போது இருந்த விலையே தற்போதும் கோதுமை மா விலை இருந்து வருகிறது. அதனால் இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனால். கோதுமை மா மற்றும் மாஜரின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் தற்போது கடைகளில் ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோ கிராம் கேக், 700 ரூபாவரை குறைத்து விற்பனை செய்ய முடியும்-என்றார். (அ)

# அதிபர்கள் இன்றி இயங்கும் பிரபலமான பாடசாலைகள்

கொழும்பு, டிசெ. 30

கொழும்பில் றோயல் பாடசாலை உட்பட ஏழு பாடசாலைகள் தற்போது அதிபர்கள் இன்றி இயங்குவதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், தேவி பாலிகா, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி மொறட்டுவை, செயின்ட் பால்ஸ், இந்துக் கல்லூரி, இசிப்பத்தன கல்லூரி, லும்பினி மற்றும் பிலியந்தலை மத்திய மகா வித்தியாலயம் ஆகியவை கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பாடசாலைகளிலும் அதிபர்கள் இன்றி இயங்கி வருவதாகவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும், நாடளாவிய ரீதியில் 46 பாடசாலைகளில் அதிபர்கள் இல்லாமல் இருப்பதும் தெரியவந்தது.

பண்டாரநாயக்க மகா வித்தியாலயம், கம்பஹா, சங்கமித்தா கல்லூரி, தர்ம சோகா, தேவானந்தா வித்தியாலயம், புனித தோமஸ் சிலாபம், ஜோசப் வாஸ் கல்லூரி, ராஜபக்ச வித்தியாலம் வீரகெட்டிய, அநுராதபுரம் மகா வித்தியாலயம் மற்றும் பல பாடசாலைகளுக்கு உரிய அதிபர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, வெற்றிடங்களை நிரப்ப 2024 டிசெம்பர் 31 இற்கு முன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மாத்தளையில் 2 இளைஞர்கள் ஆற்றில் விழுந்து உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 30

மாத்தளை உவர் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பணிபுரிந்த இரு இளைஞர்கள் ஆற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் வலையில் சிக்கியிருந்த பீப்பாய் ஒன்றை அகற்ற முற்பட்ட ஒருவர் வழுக்கி, ஆற்றில் வீழ்ந்துள்ளார்.

அவரை காப்பாற்றுவதற்காக மற்றைய இளைஞர் முயற்சித்துள்ளார். இதன்போது, இருவரும் நீரால் அடித்து செல்லப்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவத்தில் மாத்தளை - கலுதாவளை மற்றும் கிவுல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களே உயிரிழந்துள்ளனர் எனவும், உயிரிழந்தவர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கட்டுநாயக்கவில் கொக்கெய்னுடன் வெளிநாட்டுப் பெண் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 30

கொக்கேய்னுடன் இலங்கைக்கு வந்த 41 வயதான வெளிநாட்டுப் பெண் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில், விமான நிலைய போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழு, கைது செய்துள்ளது.

கானாவில் இருந்து வந்த குறித்த பெண், தென்னாபிரிக்க கடவுச்சீட்டுடன் இன்று அதிகாலை 1.50 மணியளவில் கட்டார் எயார்வைஸ் விமானத்தில் நாட்டுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கைதான பெண்ணிடமிருந்து சுமார் 4 கிலோ 68 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். இதன் பெறுமதி 142 மில்லியன் ரூபா என தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அதிகாரிகளுடன் போராடுகின்றது அரசு

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, டிசெ. 30

**தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளை பாதுகாப்பதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது அரச அதிகாரிகளுடன் போராடி வருகின்றது, அதேசமயம் தேசிய மக்கள் சக்தி ஆட்சியை கைப்பற்றுவதற்கு முன்னர் மக்களின் உரிமைகளுக்காக வீதியில் இறங்கிப் போராட வேண்டியிருந்தது என கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.**



"ஷில்பாபிமானி' ஜனாதிபதி விருதுகள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய போது இதனை தெரிவித்தார்.

சில அதிகாரிகள் அரசாங்கத்தின் ஆணையை உணராமல், இன்னும் தங்கள் பழைய முடிவுகள், உடன்படிக்கைகள், அமைச்சரவை முடிவுகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்களில் நிற்கிறார்கள் என்று அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, நாங்கள் மக்களின் உரிமைகளுக்காக, வீண், கொள்ளை, மோசடி மற்றும் ஊழலுக்கு எதிராக தெருக்களில் போராடினோம், மேலும் அரசாங்கத்தின் தவறான செயல்களை விமர்சித்தோம். இப்போது, நாம், வேலை செய்து முடிவுகளை எடுத்த அரச அதிகாரிகளுடன் போராட வேண்டும். மக்களுக்கு எதிராகச் செயல்பட்ட முன்னாள் அரசுகளின் கொள்கைகளின் படி, அவர்களுக்கு நிவாரணம் வழங்காமல், அவர்களின் உரிமைகளை மீறுவதில் தற்போது, பழைய நடைமுறைகளை அகற்றுவதில் அவர்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது கடந்த அரசாங்கங்களின் போது தாங்கள் கடைப்பிடித்த கொள்கைகளுக்கு எதிராக ஜனாதிபதி அனுரகுமாரவிற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதில் சிரமப்படுகின்றனர்.

இந்த நிலைமையை அதிகாரிகளை நம்ப வைப்பதும் கடினமாக இருக்கிறது. அதிகாரிகள் இன்னும் தங்கள் பழைய தீர்மானங்கள், உடன்படிக்கைகள், அமைச்சரவை முடிவுகள் மற்றும் வர்த்தமானி அறிவிப்புகளில் உறுதியாக இருக்கிறார்கள்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, தேசிய பொருளாதாரம், உள்ளூர் தொழில்கள் போன்றவற்றை வலுப்படுத்த அவர்கள் முடிவுகளை எடுக்கவில்லை. ஆனால் வெளிநாட்டு சக்திகள், இறக்குமதியாளர்கள் மற்றும் பல தேசிய நிறுவனங்களை வலுப்படுத்த மட்டுமே அவர்கள் முடிவு எடுக்கவில்லை. அதற்கேற்ப வரிக் கொள்கைகளை அவர்கள் எடுத்துள்ளனர். அதிகாரிகள் இன்னும் வாதிடுகின்றனர். இன்று அவர்கள் எடுத்த முடிவுகளுக்காக எங்களுடன் போராட வேண்டும், நிதி அமைச்சகம், வரிக் கொள்கை போன்றவற்றுடன் நாங்கள் போராட வேண்டியுள்ளது-என்றார். (அ)

# நுவரெலியாவில் குவியும் சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, டிசெ, 30

வருட இறுதி விடுமுறைகளை முன்னிட்டு நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் நுவரெலியாவுக்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

அதன்படி நுவரெலியா கிரகரி வாவி, பிரதான நகர் ஹக்கல பூங்கா, விக்டோரியா பூங்கா, உலக முடிவு, சீத்தா எலிய கோவில், வரலாற்று சிறப்புமிக்க தபால் நிலையம் போன்ற இடங்களுக்கு அதிகம் செல்வதனால் நுவரெலியாவில் உள்ள வாடகை வாகன ஓட்டுநர்கள், சுற்றுலா வழிகாட்டிகள், ஹோட்டல் உரிமையாளர்கள், வர்த்தகர்கள், வணிகர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

மேலும் அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு தற்போது விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும் , நத்தார் பண்டிகை விடுமுறை மற்றும் புத்தாண்டு விடுமுறை என தொடர்கிறது இதனால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு விடுமுறையினை கழிப்பதற்காக வருகை தந்துள்ளதாக கூறப்படுகிறது.

நுவரெலியா பகுதியில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளமையினால் மாலை நேரங்களில் பிரதான வீதிகளில் வாகன நெரிசல்களும் ஏற்பட்டுள்ளன.

இதற்காக விசேட போக்குவரத்து ஏற்பா டுகள் செய்து அதிக பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (அ)

# லொறி சக்கரத்தில் சிக்கிய குழந்தை!

கொழும்பு, டிசெ. 30

கண்டி, ஹசலக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டப கொல்ல பிரதேசத்தில் லொறியின் பின் சக்கரத்தில் சிக்கி 1 வயது 10 மாதப் பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

நேற்று முன் தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சிறுமி, தாய் மற்றும் தந்தையுடன் உறவினர் வீட் டுக்கு சென்ற போது, அங்கிருந்த லொறியொன்று புறப்பட்டுச் செல்ல முற்பட்டவேளை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

விபத்தை ஏற்படுத்திய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை ஹசலக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஓட்டோ திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து பேர் கைது!

கொழும்பு, டிசெ. 30

கொழும்பின் பல பகுதிகளில் ஓட்டோ திருட்டில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீதுவை, மாளிகாவத்தை, கிராண்ட்பாஸ் ஒருகொடவத்தை ஆகிய பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களால் குறித்த ஐவரும் கைதாகினர்.

கைதானவர்கள் கொழும்பு - கோட்டை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஓட்டோக்கள் கொழும்பு - கோட்டை, கிரிபத்கொடை, வத்தளை, பொரளை ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குப்பட்ட பகுதிகளில் வைத்துத் திருடப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# தேவை இல்லாமல் உப்பை பதுக்கி வைப்பதை தவிர்க்குக!

கொழும்பு, டிசெ. 30

தேவையில்லாமல் உப்பினை பதுக்கி வைப்பதை தவிர்க்குமாறு அம்பாந்தோட்டை லங்கா உப்பு நிறுவனத்தின் தலைவர் டி. நந்தன திலக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒரு மாதத்திற்கு சராசரியாக ஒரு குடும்பத்திற்கு 400 கிராம் உப்பு தூள் மற்றும் 1 கிலோ கல் உப்பு 2 பைக்கெற்றுக்கள் போதுமானது.

எனினும், உப்புக்கு தட்டுப்பாடு ஏற்படாது எனவும் தேவையற்ற அச்சம் காரணமாக உப்பினை பதுக்கி வைப்பதை தவிர்க்குமாறும் அவர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாந்தோட்டை லங்கா உப்பு நிறுவனத்திடம் தற்போது 6 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு இருப்பதாகவும், அது ஜனவரி மாதம் வரை போதுமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

உப்புக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்ற சந்தேகம் காரணமாக வெளிநாடுகளில் இருந்து 30 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ)

# சட்டவிரோத தொல்பொருள் அகழ்வு பொலனறுவையில் நான்கு பேர் கைது!

கொழும்பு, டிசெ. 30

பொலனறுவை - நவ நகர பிரதேசத்தில் சட்டவிரோதமாக தொல்பொருள் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொலனறுவை பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களிடம் இருந்து அகழ்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலனறுவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# 75,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி!

கொழும்பு, டிசெ. 30

நேற்று காலை வரை 75 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டு, சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் 32 ஆயிரம் மெற்றிக் தொன் பச்சை அரிசி எனவும், 43 ஆயிரம் மெற்றிக் தொன் நாட்டரிசி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாடு காரணமாக அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தனியார் தரப்பினருக்கு அனுமதி வழங்க மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. (அ)

# 30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 30

30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அம்பாந்தோட்டை லங்கா உப்பு நிறுவனத்தின் புதிய தலைவர் நந்தன திலக தெரிவித்தார்.

நாட்டில் உப்புக்கான பற்றாக்குறை ஏற்படும் நிலையில் அதற்குத் தீர்வாக, குறித்த தொகை உப்பு இறக்குமதி செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தேவையற்ற வகையில் உப்பைச் சேமித்து வைப்பதைத் தவிர்க்குமாறு, நந்தன திலக பொதுமக்களைக் கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் பொறுப் [illegible] கங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

அம்பாந்தோட்டை உப்பு நிறுவனத்திடம் 6,000 மெற்றிக் தொன் உப்பு கையிருப்பில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அந்த உப்பு கையிருப்பு எதிர்வரும் ஜனவரி மாதம் வரை போதுமானதாக இருக்கும் என அவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீனாவிடம் புதிய திட்டங்களை முன்வைக்க அநுர அரசு திட்டம்

## பல சுற்று கலந்துரையாடல்கள் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 30

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மரியாதை செலுத்தும் வகையில், சீன விஜயத்தின்போது இலங்கை முன்வைக்க விரும்பும் எந்தவொரு புதிய திட்டங்களுக்கும் முழு அளவிலான ஒத்துழைப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், முன்வைக்க உத்தேசிக்கப்படுகின்ற புதிய திட்டங்கள் குறித்து அரசாங்கத்துக்குள் விசேட பல சுற்று கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன.**

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் இந்திய விஜயம் பல சர்ச்சைக்குரிய விடயங்களுடன் நிறைவடைந்தது. நாட்டுக்கு பாதகமான பல ஒப்பந்தங்களில் ஜனாதிபதி கைச்சாத்திட்டதாக பலரும் குற்றம் சுமத்தியபோதிலும், அவ்வாறான தீங்கு விளைவிக்கும் ஒப்பந்தங்கள் எதிலும் கைச்சாத்திடவில்லை என அரசாங்கம் அறிவித்தது. இதன் காரணமாக இந்திய விஜயத்தை தொடர்ந்து ஜனாதிபதியின் அடுத்த சீன விஜயத்தையே பலரும் உற்று நோக்குகின்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார எதிர்வரும் 12ஆம் திகதி சீனா செல்லவுள்ளார். அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியா, அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் ஜனாதிபதியின் சீன விஜயத்தை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன. இதற்குக் காரணம், சீனாவை நோக்கிய ஒரு சார்பு தன்மை அரசாங்கத்திடமிருந்து வெளிப்படத் தொடங்கியுள்ளதாக கொழும்பைத் தளமாக கொண்ட மேற்குலக இராஜதந்திர தகவல்கள் சந்தேகங்களை வெளியிட்டுள்ளன.

அது மாத்திரம் அன்றி ஜனாதிபதி அநுரகுமாரவின் சீன விஜயத்தின் பின்னரே அரசாங்கத்தின் வெளிவிவகார கொள்கை குறித்து ஒரு தெளிவான பார்வையை அனைவராலும் உணர முடியும். எவ்வாறாயினும் அண்மைய புவிசார் அரசியல் நிகழ்வுகளை நோக்கும்போது ஜனாதிபதியின் சீன விஜயம் மிகவும் விசேடமானதாக அமைகிறது. குறிப்பாக இந்த விஜயத்தை திட்டமிடுவதற்காக சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனை சம்மேளன தேசியக் குழுவின் உப தலைவர் கின் பொயோங் தலைமையிலான உயர் அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு வந்திருந்தது.

இந்திய விஜயத்தை நிறைவு செய்து கடந்த 17ஆம் திகதி நாடு திரும்பிய ஜனாதிபதி அநுரவை, மறுநாள் காலை (18ஆம் திகதி) சீனப் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இதுவரை எந்தவொரு ஜனாதிபதிக்கும் கிடைக்காத தனித்துவமான தீர்மானத்தை சீனா முன்வைத்துள்ள நிலை யில், சீன விஜயத்தின்போது முன்வைக்க உத்தேசிக்கப்படு கின்ற புதிய திட்டங்கள் குறித்து கடந்த சில நாட்களாக அரசாங்கத்துக்குள் விசேட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

# வலி நிவாரணி மருந்தை குடித்த குழந்தை மரணம்!

கொழும்பு, டிசெ. 30

பாதத்தில் ஏற்பட்ட வலிக்காக தாய்க்கு கொண்டு வந்த வலி நிவாரணி மருந்தை சிறு குழந்தையொன்று குடித்து உயிரிழந்துள்ளது.

புத்தளம்-கல்லடி பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் இளைய பிள்ளையான 2 வயதுடைய எஸ்.ஏ.வினுக மந்தித் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

மூன்று பிள்ளைகளையும் உறவினர் வீட்டுக்கு அழைத்துச் செல்ல பெற்றோர்கள் தயார்ப்படுத்திக் கொண்டிருந்த வேளையில், யாருக்கும் தெரியாமல் உயரமான இடத்தில் வைக்கப்பட்டிருந்த தாயின் பாத வலிக்கான திரவ நிவாரணி மருந்தை சிறு குழந்தை எடுத்துச் சென்றுள்ளது.

அதன் பின்னர் மூடியை கழற்றி குழந்தை குடித்துக் கொண்டிருந்ததை அவதானித்த தந்தை, உடனடியாக அதை அங்கிருந்து அகற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பெற்றோர் குழந்தையை பாலாவியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு பரிசோதனை செய்த மருத்துவர், குறித்த வலி நிவாரணி திரவம் குழந்தையை மயக்கமடையச் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

முந்தலம் வைத்தியசாலையில் குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள், குழந்தையை உடனடியாக அம்புலன்ஸ் மூலம் சிலாபம் பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர், சிலாபம் மருத்துவமனையில், குழந்தையின் ஆபத்தான நிலை பரிசோதிக்கப்பட்டு, மருத்துவ ஊழியர்களுடன் அம்புலன்ஸ் மூலம் கொழும்பில் உள்ள லேடி றிஜ்வே சிறுவர் மருத்துவமனைக்கு குழந்தையை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

எனினும், குழந்தை றிஜ்வே சிறுவர் மருத்துவமனையை நெருங்கிய தருணத்தில் அம்புலன்ஸில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

குழந்தையின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனையை தடயவியல் மருத்துவம் மற்றும் நச்சுயியல் நிறுவகத்தின் உதவி சட்ட வைத்திய அதிகாரி ஜானக பொலொன்வெல மேற்கொண்டுள்ளார்.

# ஐக்கிய தேசியக் கட்சியை அழிப்பதற்கு இடமளியோம்!

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

"ஐக்கிய தேசியக் கட்சியை ஒரு சிலர் பணயக் கைதியாக பயன்படுத்த முற்படுகின்றனர். எனினும், கட்சியை அழிப்பதற்கு இடமளிக்கமுடியாது." என்று பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடுத்தப்படியாக ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர் நான்தான். எனவே, ஒரு சிலரின் தனிப்பட்ட தேவைக்காக கட்சியை அழிக்க இடமளிக்க முடியாது. மக்களின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை பாதுகாக்க வேண்டும்.

கட்சியை விட்டு சென்றவர்களும் மீள வரவேண்டும்.

ஒரு சிலருக்காக எமது கட்சியை பணயக்கைதியாக பயன்படுத்த இடமளிக்க முடியாது. இந்நாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திய கட்சியே ஐக்கிய தேசியக் கட்சியாகும். அக்கட்சியை பழைய நிலைமைக்கு கொண்டுவர வேண்டும்-என்றார். (அ)

# தேசிய மின் கட்டமைப்புக்கு 500 மெகாவாட் மின் அலகை இணைக்க அரசு எதிர்பார்ப்பு!

கொழும்பு, டிசெ. 30

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களின் மூலம் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் தேசிய மின் கட்டமைப்பிற்கு 500 மெகாவாட் மின் அலகை இணைக்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தெரிவித்த வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, தற்போது புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி சுமார் 1,400 மெகாவாட்டாக உள்ளதாகத் தெரிவித்தார்.

எரிசக்தி அதிகார சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நடுத்தர மற்றும் பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் இது தொடர்பாக எதிர்நோக்கப்படும் பிரச்சினை குறித்து அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது முதலீட்டாளர்கள் கணிசமான அளவு பங்குபற்றியுள்ளனர்.

பிராந்தியத்தில் அதிக அளவான எரிசக்தியினை செலவிடும் நாடாக இருந்த போதிலும், இந்த நிலைமையினை மாற்றி நியாயமான மற்றும் மலிவான விலையில் எரிசக்தியினை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளதாக, அவர் கூறினார்.

எரிசக்தி உற்பத்தியில் முதலீடு செய்ய முன்வரும் தனியார் துறைக்கு அரசாங்கம் போதுமான வசதி வாய்ப்புக்களை வழங்குவதாகவும் தெரிவித்த வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி இது அரசாங்கத்திற்கும் முதலீட்டாளர்களுக்கும் முன்னேற்றகரமான சூழ்நிலையை உரு வாக்கும் எனவும் குறிப்பிட்டார். (அ)

# பேருந்துகளை சோதனையிட சிவில் உடையில் பொலிஸார்!

கொழும்பு, டிசெ. 30

நாடளாவிய ரீதியில் வாகன விபத்துக்களைக் குறைக்கும் வகையில் பொலிஸாரால் விசேட போக்குவரத்து நடவடிக்கையொன்று அமல்படுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதிகளை மீறித் தொலைதூர பஸ் சாரதிகள் கவனக்குறைவாக வாகனம் செலுத்தும் விடயம் தொடர்பில் பிரதானமாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பயணிகள் பஸ்களைச் சோதனையிடுவதற்கு சிவில் உடையில் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும், நீண்ட தூரச் சேவை பஸ்களில் அவர்கள் பயணிப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கவனக்குறைவாக வாகனம் செலுத்துதல், கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்திக் கொண்டு வாகனம் செலுத்துதல், பாதசாரி கடவைகளில் வாகனங்களை முந்திச் செல்வது மற்றும் அதிவேகமாகச் செல்வது போன்ற போக்குவரத்து விதிமீறல்கள் கண்காணிக்கப்படவுள்ளன.

சீருடையில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் பஸ்ஸை நிறுத்திச் சம்பந்தப்பட்ட போக்குவரத்து விதிமீறல்கள் குறித்து சாரதிகளுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பயணிகளின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தி சூழ்ச்சி!

## சுமணரத்ன தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 30

வடக்கு, கிழக்கில் உள்ள சில இராணுவ பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தி சூழ்ச்சி நடக்கலாம். எனவே, பாதுகாப்பு தரப்புகள் விழிப்பாகவே இருக்கவேண்டும் என்று அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-மகிந்த ராஜபக்ஷ ஆட்சிகாலத்தில்தான் நந்திக் கடலில் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இதனால் சர்வதேச ரீதியில் அவர் எதிர்கொண்ட அழுத்தங்கள் ஏராளம். போர் இவ்வாறு முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும் எமது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்கூட இதன்ஒர் அங்கம் தான்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டதால் மகிந்தவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லையென எவராலும் கூற முடியாது. எனவே மகிந்தவை பாதுகாக்கவேண்டியது நாட்டின் கடப்பாடாகும்.

76 ஆண்டு கால சாபத்துக்கு முடிவு கட்டத்தான் அநுரவை ஜனாதிபதியாக்கினார்கள். எனவே, அவரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி மாளிகை பகுதிகளில் உள்ள வீதிகளில் இருந்த பாதுகாப்பு நீக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் இருந்த இராணுவ பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை சிலர் தவறாக பயன்படுத்தி சூழ்ச்சி செய்கின்றனரா என்பது பற்றி பாதுகாப்பு தரப்பினர் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஏனெனில் புலிகள் காடு மாறினாலும் அதன் உடலில் உள்ள புள்ளிகள் மாறாது என்பார்கள்.

ஜனாதிபதி செயலக வீதிகளை திறக்க முடியும் என்றால், திவுலபத்தான வீதியை ஏன் திறக்க முடியாது - என்றார் தேரர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. கல்லடி பால சந்தை மர்ம நபர்களால் தீக்கிரை

மட்டக்களப்பு, டிசெ.30

**மட்டக்களப்பு, கல்லடி பழைய பாலத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பப் பெண்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் சந்தை இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது.**



மட்டக்களப்பு மாவட்டத்தில் நஞ்சற்ற உணவு வகைகளை விற்பனை செய்யும் ஒரு சந்தையாக காணப்பட்ட இச்சந்தையில் சுமார் 12 வருடங்களாக 30 பெண் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் தமது வாழ்வாதாரத்துக்காக நாளாந்தம் மரக்கறி, அரிசி, அரிசி மா, தேன், நெய், கருவாடு போன்ற மேலும் பல உள்ளூர் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து தமது வாழ்வாதாரத்தை ஈட்டி வந்த நிலையிலேயே இந்த நாசகார செயல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தினமும் காலை 7 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை வியாபார நடவடிக்கையில் இவர்கள் ஈடுபடுவதுடன், அதனைத் தொடர்ந்து பிற்பகல் வேளையில் குறித்த பகுதியில் மரக்கறி, பழவகை போன்ற பொருட்களை வெளியிடத்து வியாபாரிகள் வியாபாரம் செய்து வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாக குறித்த சந்தைக்கு அருகாமையில் இருந்த பொலிஸ் காவலரணில் பொலிஸாரின் கடமை நிறுத்தப்பட்டதன் பின்னர் குறித்த பகுதியில் குற்றச் செயல்களும், போதைப் பொருள் பாவனையாளர்களின் நடமாட்டமும் அதிகரித்திருந் ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை தொடக்கம் வெல்லாவெளி வரையான பகுதிகளில் இருந்து தமது வாழ்வாதாரத்தை ஈட்டுவதற்காக நாளாந்தம் போக்குவரத்துக்காக அதிக செலவை மேற்கொண்டு மட்டக்களப்பு நகரிலுள்ள மக்களுக்கு நஞ்சற்ற உணவு பொருட்களை சேவை மனப்பான்மையுடன், குறைந்த விலையில் விற்பனை செய்து வரும் பெண்கள் மற்றும் வியாபாரிகள் தமக்கான நீதியை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# 500 ஆசிரியர்களுக்கு நற்சான்றுப் பத்திரம்



கல்முனை, டிசெ.30

2023 ஆம் ஆண்டில் சாதாரண தரப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்று கல்முனை கல்வி வலயம் தேசிய மட்டத்தில் அகில இலங்கை ரீதியில் 2ஆவது இடத்தைப் பெற்றமைக்காக அந்த உயர்வுக்கு காரணமாக அமைந்த ஆசிரியப் பெருந்தகைகளைப் பாராட்டி நற்சான்றுப் பத்திரங்களை வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவர்களின் பல்லின கலை, கலாசார நிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பீ. காப்தீபன் கலந்து கொண்டார். கல்முனை கல்வி வலயம் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொள்ள காரணமாக அமைந்த 500 இற்கும் அதிகமான ஆசிரியர்கள், அதிபர்கள், பாட இணைப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் எனப்பலருக்கும் இதன்போது நற்சான்றுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (எ)

# ஐஸ் போதையுடன் கைதான இளைஞனிடம் விசாரணை

நிந்தவூர், டிசெ.30

ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இளைஞனிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவர் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேக நபரிடம் இருந்து 2 கிராம் 580 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் சந்தேக நபர் சான்றுப்பொருட்களுடன் நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மற்றும் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பாலர் பாடசாலையில் கலை நிகழ்ச்சி






அட்டாளைச்சேனை, டிசெ.30

அட்டாளைச்சேனை விஷ்டம் அகடமி ஆங்கில பாலர் பாடசாலையின் விடுகை விழாவும், கலை நிகழ்ச்சியும் லொயிட்ஸ் விழா மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ. எம். இர்பான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அக்கரைப்பற்று பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ. எம். நௌபருடன் கலந்து கொண்டார். (எ)

# பரராஜசிங்கம் கொலையை வைத்து சாணக்கியன் அரசியல் பிழைப்பு!

## பிள்ளையான் கட்சி குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, டிசெ.30

ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையை வைத்து இரா. சாணக்கியன் போன்றவர்கள் அரசியல் பிழைப்பு நடத்துவது அவரின் ஆன்மாவை கேவலப்படுத்தும் ஈனச்செயல் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி விமர்சித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியினரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையின் பின்னணியில் இருந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் இவர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஐந்து வருட தடுப்பு காவலுக்கு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த சந்தேக நபர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் எவ்வித ஆதாரமும் அற்றவை என்பதை சுட்டிக்காட்டி அவர்களை நிரபராதிகள் என மேல் நீதிமன்றம் விடுவித்து விடுதலை செய்திருந்தது.

இவ் வழக்கில் நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலையானவர்களில் எமது கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனும் ஒருவராவார்.

இந்த நிலையில் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரும் பரராஜசிங்கத்தின் கொலைக்கு காரணமானவர் பிள்ளையான் என்று சாணக்கியன் அடிக்கடி வசைபாடி வருவதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தேசிய மட்ட கலாசார போட்டி சாதித்தது கல்முனை சாஹிரா



கல்முனை, டிசெ.30

கலாசார அமைச்சால் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட தேசிய மட்ட கலாசார போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரி அணி, ரபான் நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தைப் பெற்று கல்லூரிக்கும் பிரதேசத்துக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளது. (எ)

# விகாரையில் அன்னதான மண்டபம் திறப்பு

கல்முனை, டிசெ.30

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச். எம். எம் ஹரீஸின் டி -100 திட்டத்தினூடாக ஜனாதிபதி செயலகத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கல்முனை சிறீ சுபத்ராராம மகா விகாரையில் நிர்மாணிக்கப்பட்ட அன்னதான மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம விகாரையின் அன்னதான மண்டபத்தை திறந்து வைத்தார். (எ)

# கணக்காய்வு பரீட்சையில் காரைதீவில் இருவர் தெரிவு


காரைதீவு, டிசெ.30

இலங்கை அரச கணக்காய்வு சேவை பரீட்சையில் காரைதீவைச் சேர்ந்த இருவர் சித்தியடைந்துள்ளனர்.

காரைதீவைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவி நிதிப் பொறுப்பாளர் அரவிந்தன் ஆனந்தசாமி மற்றும் ஆட்பதிவு திணைக்கள அபிவிருத்தி உபயோகத்தர் ஜீவரெத்தினம் உதயகுமார் ஆகியோர் இந்த பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரென வெடித்து சிதறியது விமானம் தென்கொரியாவில் 179 பேர் உயிரிழப்பு



சியோல், டிசெ.30

**தென்கொரியாவில் தரையிறங்கும்போது விமானம் ஒன்று திடீரென விபத்தில் சிக்கி வெடித்து சிதறியதில் 179 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் இருந்து 175 பயணிகள், 6 விமான ஊழியர்கள் என மொத்தம் 181 பேருடன் தென்கொரியாவின் முவான் நகருக்கு நேற்றுக்காலை விமானம் ஒன்று வந்து கொண்டிருந்தது.

முவான் விமான நிலையத்தில் தரையிறங்க முயற்சித்த போது விமானம் திடீரென விபத்துக்குள்ளானது. தரையிறக்கும் கியரில் கோளாறு ஏற்பட்டதால் விமானம் விபத்துக்குள்ளாகி வெடித்து சிதறியது. இந்தக் கோர விபத்தில் 179 பேர் உயிரிழந்தனர். மேலும், இருவர் படுகாயம டைந்தனர். இதையடுத்து விரைந்து வந்த மீட்புக் குழுவி னர் விபத்தில் படுகாயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். மேலும், இந்த விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

## ரஷ்யாமீது உக்ரைன் சரமாரித் தாக்குதல்

### ரயில் சேவைகள் துண்டிப்பு

மொஸ்கோ, டிசெ.30

உக்ரைன் நடத்திய சரமாரித் தாக்குதல்களால் ரஷ்யாவில் ரயில் சேவைகள் துண்டிக்கப் பட்டுள்ளன.

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் சுமார் 2 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது.

இந்தச் சூழலில் உக்ரைன் மற்றும் ரஷ்ய படைகளிடையே மீண்டும் பயங்கர மோதல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், உக்ரைன் படைகள் நடத்திய 12 தாக்குதல்கள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாகவும், சுமார் 450 உக்ரைன் இராணுவத்தினர் இந்தத் தாக்குதல்களில் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்தோடு, உக்ரைன் இராணுவத்துக்கு சொந்தமான 2 பீரங்கிகள், 3 காலாட்படை தாக்குதல் வாகனங்கள் ஆகியவை அழிக்கப் பட்டுள்ளதாகவும் ரஷ்ய பாதுகாப்புத்துறை அறிவித்திருந்தது.

இந்த நிலையில் ரஷ்யாவின் பெல்கோரோட், ரோஸ்டோவ் உள்ளிட்ட பிராந்தியங்களில் உக்ரைன் சரமாரி ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது. அவற்றில் 50இற்கும் மேற்பட்ட ட்ரோன்களை ரஷ்ய வான்பாதுகாப்பு படையினர் சுட்டு வீழ்த்தினர். எனினும், இந்தத் தாக்குதலில் வோரோனேஜ் ரயில் நிலையத்தில் உள்ள மின்கம்பிகள் சேதமடைந்தன. இதனைச் சரிசெய்யும் பணியில் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பாதுகாப்பு கருதி அந்த வழித்தடத்தில் ரயில் சேவைகள் நிறுத்தப் பட்டன. (எ)

## அமெரிக்காவின் 'தாட்' ஏவுகணைகளை முதல் முறையாக பயன்படுத்திய இஸ்ரேல்

டெல்அவிவ், டிசெ.30

ஏமனிலிருந்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவிய ஏவுகணைகளை, அமெரிக்கா வழங்கிய 'தாட்' வான் தடுப்பு ஏவுகணைகள் மூலம் இஸ்ரேல் நடுவானில் இடைமறித்து அழித்தது. இந்த வகை ஏவுகணைகளை இஸ்ரேல் பயன்படுத்துவது இதுவே முதல் முறை.

இஸ்ரேல் மீது ஈரான் கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி பாலிஸ்டிக் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியது. இவற்றை இஸ்ரேலின் 'அயர்ன் டோம்' வான் தடுப்பு ஏவுகணைகளால் நடுவானில் இடைமறித்து அழிக்க முடியவில்லை. இதனால் இஸ்ரேலை பாதுகாக்க அமெரிக்கா, 'தாட்' என்ற அதிநவீன வான் தடுப்பு ஏவுகணைகளை வழங்கியது. இதை இயக்குவதற்கு அமெரிக்க படையினரும் இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டனர்.

தாட் ஏவுகணை லோஞ்சர் வாகனத்தில் உள்ள ரேடார் வானில் 870 முதல் 3,000 கிலோமீற்றர் தூரம் வரை வரும் சிறிய, நடுத்தர ரக மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகளை கண்டறிந்து அவற்றை இடைமறித்து அழிக்கும் திறன் வாய்ந்தவை. இந்த தாட் ஏவுகணைகள் இஸ்ரேலில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் ஏமன் நாட்டிலிருந்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேல் மீது பாலிஸ்டிக் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தினர். இவற்றை நடுவானில் இடைமறித்து அழிக்க தாட் ஏவுகணைகளை இஸ்ரேல் முதல் முறையாக பயன்படுத்தியது.

தாட் ஏவுகணைகள் ஹவுதி தீவிரவாதிகளின் ஏவுகணைகளை வெற்றிகரமாக இடைமறித்து அழித்தன.

இந்த ஏவுகணைகளை ஏவிய அமெரிக்க படையைச் சேர்ந்த ஒருவர்கூறுகையில்; "இதுபோன்ற தாக்குதலுக்கத்தான் நான் 18 ஆண்டுகளாக காத்திருந்தேன்" என உற்சாகமாக கூறினார். (எ)

## மன்னிப்பு கேட்டார் புடின்

மொஸ்கோ, டிசெ.30

அஜர்பைஜானில் இருந்து ரஷ்யாவுக்கு புறப்பட்டுச் சென்ற அஜர்பைஜான் ஏர்லைன்ஸ்க்கு சொந்தமான விமானம் குரோன்ஸி விமான நிலையத்தில் தரையிறக்க முடியாமல் திருப்பி விடப்பட்டது. பின்னர் கஜகஸ்தானில் தரையிறங்க முயற்சித்த போது தரையில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் 38 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த நிலையில், விமான விபத்து தொடர்பில் அஜர்பைஜான் ஜனாதிபதியுடன் ரஷ்ய ஜனாதிபதி புடின் விளக்கமளித்துள்ளதாகவும், விபத்து நடந்த தற்காக மன்னிப்பு கேட்டுள்ளதாகவும் ரஷ்ய ஜனாதிபதி மாளிகை தெரிவித்துள்ளது. (எ)

## பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் இராணுவம் மோதல்

### பலி எண்ணிக்கை அதிகரிப்பு

இஸ்லாமாபாத், டிசெ.30

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் இரு நாடுகளின் இராணுவத்தினரும் மோதிக்கொண்டதால் அங்கு போர் பதற்றம் நிலவுகிறது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு பல்வேறு கிளர்ச்சி அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தானி தலிபான் என்ற கிளர்ச்சி அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு தங்கள் நாட்டின் மீது பயங்கரவாத தாக்குதல் நடத்துவதாகவும், இது பயங்கரவாத அமைப்பு என்றும் பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி வருகிறது.

மேலும் பாகிஸ்தானில் தஞ்சம் அடைந்த ஆப்கானிய அகதிகளை அரசாங்கம் வலுக்கட்டாயமாக வெளியேற்றியது. இதனால் இரு நாடுகளின் உறவில் கடும் விரிசல் ஏற்பட்டது.

மேலும் பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்துக்கும் ஆப்கானிஸ்தானில் உள்ள கோஸ்ட் மாகாணத்துக்கும் இடையே எல்லைப் பகுதியில் படைகள் சண்டையில் ஈடுபட்டதாக இரு நாட்டு அதிகாரிகளும் தெரிவித்தனர்.

குண்டுவெடிப்பை பாகிஸ்தான் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை என்றாலும், பயங்கரவாதிகளின் மறைவிடங்களை குறிவைத்ததாக பாகிஸ்தானின் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## 450 படையினர் ஒரே நாளில் பலி

மொஸ்கோ, டிசெ.30

ரஷ்ய படைகள் நடத்திய மூர்க்கத்தனமான தாக்குதலில் ஒரே நாளில் 450 உக்ரைன் இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

இது தொடர்பில் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், உக்ரைன் படைகள் நடத்திய 12 தாக்குதல்கள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாகவும், ரஷ்யாவின் பதில் தாக்குதல் களில் சுமார் 450 உக்ரைன் இராணுவத்தினர் உயிரிழந்த தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சீன ஆய்வகத்திலிருந்து கொரோனா பரவியது?

### ஆதாரத்தை மறைத்த பைடன்

நியூயோர்க், டிசெ.30

2019ஆம் ஆண்டு டிசெம்பரில் சீனாவிலிருந்து கொரோனா வைரஸ் பரவியது. இதனால், உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் அதிகளவில் மக்கள் பாதிக்கப்பட்டனர். சுமார் 2 ஆண்டுகளுக்கும் மேலாக இதன் பாதிப்பு இருந்தது.

சீனாவின் வூகான் நகரிலுள்ள ஆய்வகச் சோதனையின் போது கொரோனா வைரஸ் கசிந்தது என்று அப்போது செய்திகள் வந்தன. ஆனால், இதை சீனா மறுத்தது.

இந்த நிலையில் சீனாவிலுள்ள ஆய்வகத்தில் இருந்து தான் கொரோனா வைரஸ் பரவியது என்பதற்கான ஆதாரத்தை அமெரிக்காவின் எப். பி. ஐ. பொலிஸார் வைத்திருந்ததாகவும் ஆனால், ஜனாதிபதி ஜோ பைடன் அதை வெளியிடாது தடுத்து நிறுத்தி மறைத்து வைத்ததாகவும் அமெரிக்காவிலிருந்து வெளியாகும் வால் ஸ்டிரீட் ஜர்னல் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி!

## தொடர்ந்து சொதப்பி வரும் இலங்கை அணி



வெலிங்டன், டிசெ.30

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் ரி - 20 போட்டியில் இறுதியில் விக்கெட்களை மளமளவென பறிகொடுத்து 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது இலங்கை அணி.

இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ரி - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 172 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக டேரில் மிட்செல் 62 ஓட்டங்களும், பிரேஸ்வெல் 59 ஓட்டங்களும் அடித்தனர். இலங்கை தரப்பில் பினுரு பெர்னாண்டோ, மகேஷ் தீக்சனா, வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 173 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணிக்கு பதும் நிஸ்ஸங்க மற்றும் குசல் மெண்டிஸ் வலுவான அடித்தளம் அமைத்து கொடுத்தனர். முதல் விக்கெட்டுக்கு 121 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. குசல் மெண்டிஸ் 40 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஜேக்கப் டபி அதே ஓவரில் மேலும் 2 விக்கெட்கள் வீழ்த்தி இலங்கைக்கு நெருக்கடியை ஏற்படுத்தினார்.

பதும் நிஸ்ஸங்க தனி ஆளாக போராட மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினர். நிஸ்ஸங்க 90 ஓட்டங்களில் ஆட்டமிழக்க அத்தோடு இலங்கை அணியின் வெற்றியும் பறிபோனது.

முடிவில் இலங்கை 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 164 ஓட்டங்கள் மட்டுமே அடித்தது.

இதன் மூலம் 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. (எ)

# சச்சின், கோலி சாதனையை முறியடித்தார் ஸ்டீவ் ஸ்மித்



மெல்பேர்ண், டிசெ.30

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான "பார்டர் - கவாஸ்கர்" கிண்ண 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் தற்போது நடைபெற்று வரும் நாலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் ஸ்டீவ் ஸ்மித் சதமடித்து அசத்தினார்.

இதன் மூலம் பார்டர் கவாஸ்கர் கிண்ண தொடரில் அதிக சதங்களை விளாசிய வீரர்கள் பட்டியலில் விராட் கோலி, சச்சின் டெண்டுல்கர் ஆகியோரது சாதனையை ஸ்டீவ் ஸ்மித் முறியடித்துள்ளார். இதன்படி சச்சின் டெண்டுல்கர், விராட் கோலி ஆகியோர் தலா 9 சதங்களை அடித்துள்ள நிலையில், ஸ்டீவ் ஸ்மித் 10ஆவது சதத்தைப் பதிவுசெய்து புதிய சாதனையைப் படைத்துள்ளார். (எ)

# 5 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா அசத்தல் வெற்றி



மும்பை, டிசெ. 30

மேற்கு இந்திய தீவுகள் மகளிர் அணிக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் இந்திய மகளிர் அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இவ்விரு அணிகள் மோதிய கடைசி ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி, 38. 5 ஓ வர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 162 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய தீப்தி சர்மா 6 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார். இதேவேளை, ரேணுகா சிங் 4 விக்கெட்கள் வீழ்த்தினர். இதையடுத்து 163 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 5 விக்கெட்கள் மட்டும் இழந்து 167 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்திலும் கலக்கிய தீப்தி சர்மா, 39 ஓட்டங்கள் சேர்த்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 - 1 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. (எ)

# பும்ரா புதிய சாதனை

மெல்பேர்ண், டிசெ.30

110 வருடங்களுக்குப் பின்னர் மெல்பேர்ணில் வெளிநாட்டு வீரராக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ரா புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரின் 4ஆவது போட்டி நடைபெற்று வருகிறது.

மெல்பேர்ண் மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் பும்ரா இதுவரை 8 விக்கெட்கள் (2 இன்னிங்ஸிலும் சேர்த்து) வீழ்த்தியுள்ளார். இதையும் சேர்த்து மெல்பேர்ணில் அவர் இதுவரை கைப்பற்றிய விக்கெட்களின் எண்ணிக்கை 23 ஆக அதிகரித்தது.



இதன் மூலம் 110 வருடங்களுக்குப் பின்னர் மெல்பேர்ண் மைதானத்தில் அதிக விக்கெட்கள் கைப்பற்றிய வெளிநாட்டு வீரர் என்ற மாபெரும் சாதனையை பும்ரா படைத்துள்ளார். (எ)

## பாகிஸ்தான்-தென்னாபிரிக்கா

# பரபரப்பான கட்டத்தில் முதல் டெஸ்ட் போட்டி!



செஞ்சூரியன், டிசெ.30

பரபரப்பான சூழலில் தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது. இதில், தென்னாபிரிக்காவுக்கு வெறும் 148 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், அந்த அணி 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்துள்ளதால் வெற்றி யாருக்கு என்பதை இப்போது தீர்மானிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி செஞ்சூரியனில் நடைபெற்று வருகிறது. முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் 211 ஓட்டங்களும், தென்னாபிரிக்கா 301 ஓட்டங்களும் எடுத்தன.

இதனையடுத்து 90 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய பாகிஸ்தான் 237 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. தென்னாபிரிக்கா தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் மார்க்கோ ஜான்சன் 6 விக்கெட்களை அள்ளினார்.

இதன் மூலம் தென்னாபிரிக்காவுக்கு 148 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்த நிலையில் அந்த அணி 3 விக்கெட்கள் இழந்து 27 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளது.

தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு இன்னும் 121 ஓட்டங்கள் தேவைப்படுகிறது. கைவசம் 7 விக்கெட்கள் உள்ளது. இதனால் இந்த டெஸ்ட் பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது. (எ)

# சம்பியனானார் கோனேரு



நியூயோர்க், டிசெ.30

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்ற உலக ரேபிட் செஸ் சம்பியன்ஷிப் தொடரில் இந்திய வீராங்கனை கோனேரு ஹம்பி சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளார். இறுதிப் போட்டியில் இந்தோனேசியாவை சேர்ந்த ஐரீன் சுகந்தரை எதிர்கொண்டு விளையாடிய கொனேரு ஹம்பி 8. 5 புள்ளிகளுடன் சம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

உலக ரேபிட் செஸ் சம்பியன்ஷிப் தொடரில் இவர் பட்டம் வெல்வது இது 2ஆவது முறையாகும். (எ)

# சிம்பாவேவுக்கு எதிரான டெஸ்ட் வலுவான நிலையில் ஆப்கான்

புலவாயோ, டிசெ. 30

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி புலவாயோவில் நடைபெற்று வருகிறது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே 586 ஓட்டங்கள் குவித்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி வரும் ஆப்கானிஸ்தான் அணி 125 ஓவர்களில் 2 விக்கெட்கள் மட்டும் இழந்து 425 ஓட்டங்கள் குவித்து வலுவான நிலையில் உள்ளது. ரமத் ஷா 231 ஓட்டங்களுடனும், ஷகிடி 141 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது...

எனக்கு உண்டு.

அவரும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமையச் செயற்படுவார் என்றும் நான் நம்புகின்றேன்.

இலங்கையில் பொருளாதாரப் பிரச்னை முழுமையாகத் தீர வேண்டும். அபிவிருத்தி முழுமை பெற வேண்டும். அதன்பின்னர் ஏனைய பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது சுலபமாக இருக்கும்.

ஜனாதிபதி அநுரகுமார உறுதியளித்ததன் பிரகாரம் 2025 ஆம் ஆண்டில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலையும், மாகாண சபைத் தேர்தலையும் நடத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் இந்தத் தேர்தல்களை ஒத்திவைக்க முடியாது.

அதேவேளை, கடந்த ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் காலங்களில் அநுரகுமார வழங்கிய சகல வாக்குறுதிகளையும் தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் அவர் மீது முழு நம்பிக்கை

இலங்கை மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் ஏற்படும். - என்றார். (அ)

## பிரிட்டன்...

மற்றும் ஜப்பான் போன்ற முக்கிய நாடுகளுக்கான தூதுவர்களை நியமிக்கும் செயற்பாடு மந்த கதியில் இடம் பெறுவதாக குறிப்பிடப்படுகிறது.

இதன் காரணமாக பதில் தூதர்கள் கடமைகளை நிறைவேற்றவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது, இலங்கைக்காக சுமார் 60 தூதரகங்கள் மற்றும் வெளிநாடுகளின் துணைத் தூதரக பொது அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அவற்றில் மூன்றில் ஒரு பகுதிக்கு உயர் அதிகாரிகள் இல்லாமை நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## முன்னாள்...

போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு சந்தையில் நிலவும் தட்டுப்பாடுகளுக்கு தீர்வு காணப்படும்.

அரசியலில் இருந்து மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் போலியான பல குற்றச்சாட்டுக்களை தற்போது முன்வைக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு எவ்விதமான அச்சுறுத்தலும் கிடையாது என்று புலனாய்வு அறிக்கை கிடைத்ததன் பின்னரே வழங்கப்பட்ட இராணுவ பாதுகாப்பு மீளப் பெறப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு 60 பொலிஸார் என்ற அடிப்படையில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த மீளாய்வு அறிக்கையில் பாதுகாப்பு மேலும் குறைக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டால் வழங்கப்பட்டுள்ள 60 பொலிஸாரின் பாதுகாப்பை 30 ஆக குறைக்கலாம்.

மக்களின் வரிப்பணத்தை வீண் விரயம் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

முன்னாள் ஜனாதிபதிகளின் உயிருக்கு அச்சுறுத்தல் என்று ஊடகங்களில் குறிப்பிட்ட தரப்பினர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பான தகவல்களை பாதுகாப்பு தரப்புக்கு அளிக்க வேண்டும். அப்போதுதான் அது குறித்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்- என்றார். (அ)

## மருந்துகளின்...

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை இந்த முயற்சியில் இறங்கியுள்ளது.

எவ்வாறாயினும் புதிய சட்டமொன்றை இயற்றுவதா, இல்லை தற்போதுள்ள ஏற்பாடுகளை திருத்தியமைத்து முன்னெடுப்பதா என்பது தொடர்பில் இன்னமும் உறுதியான தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மொட்டு...

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இந்திக்க அனுருத்த ஆகியோரின் தலைமையில் மேலும் இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் நாமல் தெரிவித்துள்ளார்

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் கட்சி வீழ்ச்சியடைந்தபோதிலும், எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கட்சியில் சில புத்துணர்ச்சி காணப்பட்டதாகவும் நாமல் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியை புதிய பாதையில் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும், கட்சியை தனிப் பிரதான கட்சியாக எதிர்கொள்ளும் வகையில் வலுப்படுத்துவதற்கும் அடிமட்ட மற்றும் கிராம மட்டத்தில் உள்ள உறுப்பினர்களை தெளிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீள அழைப்பது தொடர்பில் இரண்டு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், கட்சி வீழ்ச்சியடைந்தபோது கட்சியை விட்டு வெளியேறாதவர்கள் பாதிக்கப்படாத வகையில் மீள்சேர்க்கப்படவுள்ளதாகவும் நாமல் தெரிவித்துள்ளார். (அ)

## சட்டவிரோத...

நினைத்துவிடக்கூடாது. இது குறுக்கு வழியில் வந்த அரசு அல்ல. ஆட்சி மாற்றத்தை விரும்பிய மக்கள் அலையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே இது.

கடந்த ஆட்சிகள் போல் இந்த ஆட்சியில் சட்டவிரோத மதத் தலங்களுக்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

கடந்த ஆட்சிகளில் சட்டவிரோத மதத் தலங்களே மத வன்முறைக்கு வழிவகுத்தது. அது இறுதியில் இன வன்முறையாக வெடித்தது. அப்படியான அராஜக நடவடிக்கைகளை இந்த ஆட்சியில் எதிர்பார்க்க முடியாது.

குழப்பவாதிகள் எவரும் இருந்தால் அவர்கள் பாரபட்சமின்றி தண்டிக்கப்படுவார்கள். சட்டம் தனது கடமையைச் சரிவரச் செய்யும் - என்றார். (அ)

## யாழ்...

போட்டித்தன்மை காரணமாக இவ்வாறு முன்மொழிவுகள் கோரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும்,

இலங்கை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனமானது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காக ஜப்பானிய நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்களை கோரியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 18ஆம் திகதி வரையில் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டுநாயக்க விமான நிலையக் கட்டிடத்தை கட்டி முடிக்கும் இந்த திட்டமானது, ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை நிதியத்தின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்பட உள்ளது.

பிரதான முனைய கட்டிடம், உயரமான சாலை போன்ற உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத் திட்டத்திற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் கா[illegible] 20ஆம் திகதியன்று முடிவடைகிறது. (அ)

# சாரதிக்காக அபராதத் தொகை செலுத்தினார் பிரதி அமைச்சர்

கொழும்பு, டிசெ. 30

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேன, கடமையில் இருந்த அதிகாரிகள் வாகனத்தை விடுவிக்க முன்வந்த போதிலும், அதிவேகமாக வாகனத்தை செலுத்தியதற்காக அபராதம் செலுத்த ஒப்புக்கொண்டார் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம - குருநாகல் பகுதியில் பிரதி அமைச்சரின் சாரதி அதிவேகமாக வாகனத்தை செலுத்தியமைக்காக பிடிபட்டபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப்போது வாகனத்தில் இருந்த கலாநிதி குணசேன, அனைத்து குடிமக்களும் நாட்டின் சட்டங்களை கடைபிடிக்க வேண்டும் என்று கூறி, அபராதத்தை செலுத்த வலியுறுத்தினார். (அ)

## மார்ச்...

தேங்காய்க்கு தட்டுப்பாடு நிலவும் என தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சாந்த ரணதுங்க குறிப்பிட்டார்.

கைத்தொழில் துறைக்கும் நுகர்வுக்கும் தேங்காய் விநியோகம் செய்வதில் சிரமங்கள் நிலவி வருவதாகவும் இதனால் தொடர்ந்தும் தேங்காய் விலை உயர்வடைந்து செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

தேங்காய் விளைச்சல் கிடைக்கும் வரையில் இந்த நிலைமை நீடிக்கும் என அவர் கூறினார்.

தற்போது நிலவும் நிலைமைக்கு தீர்வு வழங்கும் நோக்கில் அரசாங்கத்துக்கு சொந்தமான தென்னந்தோப்புகளில் விளையும் தேங்காய்களை சதொச நிறுவனம் ஊடாக நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

## சவேந்திர...

இருந்து எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீடித்திருந்தார்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஒகஸ்ட் 19ஆம் திகதி முதல் 2022 மே 31 வரை ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக பணியாற்றினார்.

அதன் பின்னர், தனது பதவிக்காலம் நிறைவடைய, 2022 ஜூன் முதலாம் திகதி பாதுகாப்புப் படைகளின் பதவி நிலை பிரதானியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையிலேயே அவரது பதவிக் காலம் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

அதனையடுத்து, தற்போது புதிய அரசாங்கம் அமைந்திருக்கும் நிலையில் இவரது ஓய்வு தொடர்பில் தகவல் வெளியாகியிருக்கிறது. (அ)

# சிவனொளிபாதமலையில் பெண் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 30

சிவனொளிபாதமலைக்கு சென்ற பெண் ஒருவர் திடீர் சுகவீனமடைந்து டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கமுவ மாவட்டத்தைச் சேர்ந்த ரேணுகா தமயந்தி (வயது-57) வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

## நாட்டில்...

காண்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், அந்தப் பிரச்னைகளை ஊதிப்பெருக்கும் வகையில், வன்முறைகளைத் தூண்டும் வகையில் எவராயினும் கருத்துக்களை வெளியிட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட இடமளிக்கமாட்டோம் எனவும், வேரூன்றியிருந்த தேசிய இனப்பிரச்னை ஆயுதப் போராட்டமாக மாறியதால்தான், வடக்கு மற்றும் தெற்கு இடையேயான உறவு அறுந்ததாகவும், பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அந்த நிலைமை மீண்டும் வர இடமளியோம் எனவும் புதிய அரசமைப்பின் ஊடாகத் தேசிய இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்போம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## அநுர அரசைப் பலவீனப்படுத்த...

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்து மூன்று மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் மக்கள் எதிர்பார்த்த மாற்றங்களுக்கான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரச செலவுகளை குறைத்து ஒட்டுமொத்த மக்களுக்கும் ஜனாதிபதி சிறந்த எடுத்துக்காட்டாகச் செயற்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அரசியல் தரப்பினல் மாறுப்பட்ட கருத்தை குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு மாத்திரம் பிரத்தியேகமாக பாதுகாப்பளிக்கவேண்டிய அவசியம் கிடையாது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டு, பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இவ்விடயத்தில் எவ்வித அரசியல் பழிவாங்கலும் கிடையாது. அரச செலவுகளை குறைப்பதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளோம். ஆகவே அதற்கமைவாக செயற்படுவோம்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்துவதற்கு ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள். போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். ஆகவே மக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையை ஒருபோதும் பலவீனப்படுத்த போவதில்லை.

அரசாங்கத்தின் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பினரை நாட்டு மக்கள் முழுமையாக அரசியலில் இருந்து புறக்கணித்துள்ளார்கள். ஆற்றாமையின் காரணமாகவே இவ்வாறு முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள். மக்களாணைக்கு மதிப்பளித்து எதிர்தரப்பினர் செயற்பட வேண்டும்.

சுதந்திரத்துக்கு பின்னரான காலப் பகுதியில் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இதுவரை ஆட்சியில் இருந்த அனைத்து அரசியல் கட்சிகளும் இதற்கு பொறுப்புக் கூற வேண்டும். மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## 2025 ஆம் ஆண்டில் தமிழர்களுக்கு புதிய பாதை திறக்கப்படவேண்டும்

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 30

2025ம் ஆண்டு மாற்றங்கள் நிறைந்த, தமிழர்களுக்கான புதிய பாதைகளை திறந்து விடும் ஆண்டாக மலர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையின் நத்தார் நிகழ்வும், ஆண்டிறுதி ஒன்று கூடலும் நேற்று கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய பங்குத் தந்தை சில்வெஸ்ரர் அடிகளார், கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்,

தமிழர்களின் தேசிய அபிலாசைகளை வென்றெடுக்கின்ற தமிழரின் இருப்பை தக்க வைக்கின்ற ஆண்டாக 2025ஆம் ஆண்டு அமையவேண்டும் என தெரிவித்தார். (அ)

## சிவனொளிபாதமலை சென்ற 25 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 30

பல்வேறு வகையான போதைப் பொருட்களுடன் சிவனொளி பாதமலைக்கு சென்ற 25 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வார விடுமுறையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கொண்டு வருபவர்களை கைது செய்வதற்காக ஹற்றன் பிரிவின் உத்தியோகபூர்வ மோப்ப நாய்களின் உதவியுடன் வீதித் தடைகளைப் பயன்படுத்தி தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிவனொளி பாதமலை யாத்திரை காலம் நிறைவடையும் வரை தேடுதல் பணி தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கைப் பிரஜைகளுக்கு இலவச விசா வழங்குங்கள்

### வெளிவிவகார அமைச்சு இந்தியாவிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 30

இந்தியா செல்லும் இலங்கை பிரஜைகளுக்கு இலவச விஸாவை வழங்குமாறு இந்திய அரசாங்கத்திடம் வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை - இந்தியா இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக தொடர்புகளை மேலும் விரிவாக்குவதற்கும் வலுப்படுத்துவதற்கும் இது ஏதுவாக அமையும் என்று வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அந்த வகையில் இலங்கையின் இந்த கோரிக்கை தொடர்பில் இந்தியா ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒகஸ்ட் 20ஆம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, ஜேர்மன், ஆஸ்திரேலியா, சவுதி அரேபியா, சீனா, இந்தியா, ரஷ்யா, தென் கொரியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட 35 நாடுகளுக்கு இலவச விஸா வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு இத்திட்டம் நடைமுறையிலுள்ளது.

மேற்கூறப்பட்ட நாடுகளோடு நெதர்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், டென்மார்க், போலந்து, கசகஸ்தான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், நேபாளம், இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, ஜப்பான், பிரான்ஸ், செக் குடியரசு, இதாலி, சுவிஸ்சர்லாந்து, ஆஸ்திரியா, இஸ்ரேல், பெலாரஸ், இரான், சுவீடன், கட்டார், ஓமான், பஹ்ரைன் மற்றும் நியூசிலாந்து நாடுகளுக்கு இந்த இலவச விஸா திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இந்நிலையிலேயே இலங்கை பிரஜைகளுக்கும் இலவச விஸா வழங்குவது குறித்து அவதானம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## மீனவர் பிரச்னைக்கு பேச்சு மூலமே தீர்வு!

### தமிழகம் சென்ற ரவூப் ஹக்கீம் எம்.பி.



சென்னை, டிசெ. 30

**இந்திய - இலங்கை மீனவர் பிரச்னைகளை பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

தமிழகம் இராமநாதபுரம் சென்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றினார்

"முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் இந்திய, இலங்கை இரு நாட்டு பிரச்னைகளில் பல்வேறு முக்கிய முடிவுகளை எடுத்துள்ளதுடன், இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்காற்றியவர் அவரது மறைவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது " என்றும் அவர் குறிப்பிட்டார்

இந்திய - இலங்கை மீனவர் பிரச்னைகளை இரு நாட்டு மீனவர்களும், இருநாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணவேண்டும் என்று அவர் கூறினார்.

பொருளாதார நெருக்கடி காலத்தில் இந்திய மற்றும் சீன அரசுகள் இலங்கைக்கு பெரும் தொகையை நிதியாக அளித்ததால் இன்று இலங்கை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டு வருகிறது என்பதையும் ரவூப் ஹக்கீம் நினைவுபடுத்தினார்.

எனவே இரு நாடுகளுடன் இலங்கை தொடர்ந்து நட்புடன் இருந்து வருகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## ரயில் இயந்திரங்களின் பற்றாக்குறையே சேவைகள் தாமதம், இரத்துக்கு காரணம்!

கொழும்பு, டிசெ. 30

ரயில் இயந்திரங்களுக்கான பற்றாக்குறையே ரயில் தாமதம் மற்றும் இரத்துச் செய்யப்படுவதற்கான முக்கிய காரணம் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்திடம் தற்போது குறைந்த பட்சம் 50 இயந்திரங்கள் மாத்திரமே இயங்குவதற்கு ஏற்றதாக உள்ளதாக அதன் பேச்சாளர் தெரிவித்தார்.

சீரான ரயில் சேவையை முன்னெடுப்பதற்கு 70 ரயில் இயந்திரங்கள் அவசியப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரயில்களை ரத்து செய்யாமல் அல்லது தாமதமின்றி இயக்க குறைந்தபட்சம் 60 இயந்திரங்கள் தேவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இயங்கும் நிலையில் உள்ள 50 இயந்திரங்களில் பெரும்பாலானவை பல்வேறு தொழில் நுட்பக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ரயில் இயந்திரமொன்று தேவையான அளவிலேயே பாரங்களை சுமந்து செல்லவேண்டும், ஆனால் அதிகளவான பாரங்களைச் சுமந்து செல்வதன் காரணமாக பல்வேறு தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ரயில் இயந்திரங்களை பழுது பார்ப்பதற்கான உதிரிப் பாகங்களுக்கு தட்டுப்பாடு இருப்பது கடந்த காலங்களில் அவதானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இயந்திரத்தைச் சீர்செய்வதற்கு தேவையான உதிரிப்பாகங்களை தற்போது ரயில்வே திணைக்களம் பெற்று வருவதாக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

## தெரிவு செய்த பிள்ளைகளுக்கு மாத்திரம் கொடுப்பனவு வழங்குவது நியாயமற்றது

### பெற்றோர்கள் விசனம்

கொழும்பு, டிசெ. 30

புதிய கல்வி ஆண்டு எதிர்வரும் ஜனவரி மாதம் 02 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் தங்கள் பிள்ளைகளுக்கான பாடசாலைப் பொருட்களின் விலை அதிகமாகவுள்ளதாக பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்து, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளுக்கு 6,000 ரூபா பாடசாலை உபகரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என தெரிவித்திருந்தார்.

இதற்கமைய ஏற்கனவே சில பிள்ளைகள் பாடசாலை உபகரணக் கொடுப்பனவாக 6,000 ரூபாவைப் பெற்றுள்ளதாக சில பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், தெரிவு செய்யப்பட்ட குழுவுக்கு மாத்திரம் பாடசாலை உபகரண கொடுப்பனவு வழங்குவது நியாயமற்றது என சில பெற்றோர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதேவேளை, அனைவரும் நியாயமாக வழங்கப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (அ)

## தென் கொரிய விமான விபத்து; இலங்கை அரசாங்கம் இரங்கல்

கொழும்பு, டிசெ. 30

தென் கொரியாவின் முவான் விமான நிலையத்தில் நேற்று காலை ஏற்பட்ட விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இலங்கை அரசாங்கம் இரங்கல் தெரிவித்துள்ளது.

தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து தென் கொரியாவின் முவான் நோக்கி 181 பேருடன் பயணித்த விமானம் விபத்துக்குள்ளானதில் இருவரை தவிர ஏனைய அனைவரும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த துயரச் சம்பவத்தால் ஏற்பட்ட உயிரிப்புகள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு இலங்கை வெளியுறவு அமைச்சு தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள வெளியுறவு அமைச்சு இதனை தெரிவித்துள்ளது

"இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இலங்கை அரசு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்த இழப்பைச் சமாளிக்க அவர்கள் மன உறுதியைப் பெறவேண்டும்" என்று அதன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவாக குணமடைய வேண்டும் எனவும், காயமடைந்தவர்கள் முழுமையாகவும் விரைவாக குணமடைய எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் அவர்களுடன் இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## முன்னாள் வங்கி முகாமையாளர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 30

அரச வங்கி ஒன்றின் முன்னாள் முகாமையாளர் ஒருவர், பெருந்தொகை பணமோசடியில் ஈடுபட்டமைக்காக யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வங்கியில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து 15 லட்சம் ரூபாவை ஒருவரிடம் இருந்து மோசடி செய்ததாக யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டைத் தொடர்ந்தே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தான் பெற்றுக்கொண்ட பணத்துக்காக சந்தேக நபர் காசோலை வழங்கியபோதிலும், குறித்த காசோலை திரும்பியதைத் தொடர்ந்தே அவர் மீதான முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தலைமறைவாக இருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.